TNVR230004412024

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.**

முன்னிலை: திரு. R.ரத்தினவேல் பாண்டியன், M.A.B.L.,
சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.218/2024**

CNR No.TNVR030004412024

-----------

தேவி ... வாதி

– எதிர் –

1. சுப்பிரமணியன்
2. தனலட்சுமி ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது ஸ்ரீவில்லிப்புத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.22/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில், அதிகார வரம்பிற்கு உட்பட்டு சார்பு நீதிமன்றம், இராஜபாளையத்திற்கு வழக்கு கோப்புகள் மாற்றம் செய்யப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.218/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 21.08.2024 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.உடையார்சாமி அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரைக்காக வழக்கானது நிலுவையில் இருந்த நிலையில் 1, 2 பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

**தீர்ப்புரை**

வாதிக்கு பிரதிவாதிகள் வழக்கு புரோநோட்டு கடனுக்குரிய அசல் மற்றும் நாளது தேதி வரை செலுத்த வேண்டிய வட்டி தொகையான ரூ.1,20,300/–ஐ

செலுத்திடக்கோரியும், வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் அசல் தொகையான ரூ.1,00,000/−த்திற்கு வட்டியாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/−க்கு ரூ.1.00 வீதம் கணக்கிட்டு செலுத்தக்கோரியும், வழக்கு செலவு தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்க உத்தரவிடக்கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u> −

வாதியிடம் கணவன், மனைவியாகிய பிரதிவாதிகள் அவர்களது அவரச நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், சில்லறைக் கடன்களை தீர்ப்பதற்காகவும், 25.04.2020 ம் தேதி ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ரொக்கம் கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/−க்கு ரூ.1/− வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, கூடிய வட்டியையும், அசலையும் வாதி வேண்டும் பொழுது வாதியிடமாவது, அவரின் உத்தரவு பெற்றவரிடமாவது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, அதற்கு ஆதரவாக வாதியின் பெயருக்கு மேற்படி 25.04.20220 ம் தேதி ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வாதியின் வீட்டில் வைத்து ஒரு புரோநோட்டு எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

மேற்படி புரோநோட்டு கடனுக்கு அசலுக்காவது அல்லது வட்டிக்காவது யாதொரு தொகையும் பிரதிவாதிகள், வாதிக்கு நாளது தேதி வரையில் செலுத்தி வைக்கவில்லை. அவைகளை செலுத்தும்படி பிரதிவாதிகளை வாதி நேரிலும், தன் வகையாட்கள் மூலமும் தொடர்ந்து கேட்டு வந்தும், அவைகளை செலுத்துவதாக சொல்லி, பிரதிவாதிகள் செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்துள்ளார்கள். எனவே, வாதி பிரதிவாதிகள் பெற்ற மேற்படி புரோநோட்டு கடனுக்கு செலுத்த வேண்டிய அசல் ரூ.1,00,000/−த்தை, மேற்படி புரோநோட்டில் கண்ட வட்டி ஷரத்துப்படி அறிவிப்பு தேதி வரையிலான வட்டியையும் சேர்த்து பிரதிவாதிகள், வாதியிடம் செலுத்த வேண்டுமென்று கடந்த 03.12.2021 ம் தேதி வாதி, பிரதிவாதிகளுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார். அதனை பிரதிவாதிகள் 04.12.2021 ம் தேதி பெற்றுக்கொண்டுள்ளனர். எனவே, பிரதிவாதிகள் பெற்ற புரோநோட் கடனுக்கு செலுத்த வேண்டிய அசல் ரூ.1,00,000/−த்தையும், அதற்கு மேற்படி புரோநோட்டில் கண்ட வட்டி ஷரத்துப்படி நாளது தேதி வரையிலான வட்டியையும் சேர்த்து பிரதிவாதிகள் வாதியிடம் செலுத்தவும்,

மேற்படி புரோநோட்டில் கண்ட வட்டி சரத்துப்படி வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பு தேதி வரை புரோநோட் கடனுக்கு சேர வட்டி வகையறாவை செலவு தொகை சகிதம் வசூலிக்க வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்து, பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாமல் தோன்றாதரப்பினர்களாகியுள்ளனர்.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் <u>வாதி கோரியுள்ள வழக்கு கோரிக்கை தொகையினை வாதி பெற தகுதியுடையவரா?</u> என்பதே ஆகும்.

5. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>1ம் எழுவினாவிற்கு தீர்வு</u>** – <u>வாதி கோரியுள்ள வழக்கு கோரிக்கை தொகையினை வாதி பெற தகுதியுடையவரா ?</u>

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதியிடமிருந்து பிரதிவாதிகள் கடந்த 25.04.2020ம் தேதியன்று ரூ.1,00,000/– ரொக்க கடனாக பெற்றுக்கொண்டு அதற்கான மாத வட்டி ரூ.100/–க்கு ரூ.1/– வீதம் அசல் மற்றும் வட்டி செலுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டு சாட்சி முன்னிலையில் வா.சா.ஆ.1 புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளதாகவும், அதனை பல முறை வாதி பிரதிவாதிகளிடம் நேரில் கேட்டும் பிரதிவாதிகள் எந்தவிதமான அசலும், வட்டித்தொகையும் செலுத்தவில்லை என்றும், பிரதிவாதிகள் கடன் தொகையை திரும்ப செலுத்தாமல் இருந்து வந்ததால் வாதி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதாலும், வாதி அவரது வழக்கினை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மற்றும் தனது சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்துள்ளதால் வாதி தரப்பு வழக்கினை வாதிக்கு ஆதரவாக அனுமதித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

7. வாதி வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் கடந்த 25.04.2020ம் தேதியன்று வாதியிடமிருந்து பிரதிவாதிகள் ரூ.1,00,000/- தொகையை ரொக்க கடனாக சாட்சியின் முன்னிலையில் பெற்றுக் கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும் அசலும் திரும்ப செலுத்த ஒப்புக்கொண்டு புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளதாகக் கூறி அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 புரோநோட்டு வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள ரூ.1,00,000/- தொகையை அதில் குறிப்பிட்டுள்ள வட்டியுடன் திருப்பி செலுத்த ஒப்புக்கொள்வதாக வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. வாதி தரப்பு வழக்கினை வாதி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணங்கள் மூலமும், வாதி தன்னை சாட்சியாக விசாரித்தும், வாதி தரப்பு முதல்நிலை வழக்கினை வாதி நிரூபணம் செய்துள்ளார். ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட போதிலும் அழைத்தும் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாகியுள்ளனர்.

9. வாதி வழக்கில் கூறியுள்ள வழக்குரை சங்கதிகளை மறுக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜராகி எவ்வித எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை. வாதி தரப்பில் வழக்கில் கூறியுள்ள சங்கதிகளை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் எடுத்துரைத்து முதல்நிலை வழக்கினை நிரூபணம் செய்துள்ள நிலையில், அதனை பிரதிவாதிகள் தரப்பில் மறுத்துரைக்கவில்லை என்பதால் வாதியின் வழக்கினை வாதிக்கு ஆதரவாக அனுமதிக்கலாம் என்று இந்த எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,** வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதிகள் வழக்கு தீர்ப்பாணை தொகையான ரூ.1,20,300-யையும், அதில் அசல் தொகை ரூ.1,00,000/-க்கு ஆண்டுக்கு 6 சதவீதம் வட்டியுடன் பிராது தேதி முதல் தீர்ப்பாணை தொகையை முழுவதுமாக திரும்ப செலுத்தும் தேதி வரை செலுத்த வேண்டும் என்று வாதியின் வழக்கு வாதிக்கு ஆதரவாக அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு **2024** ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **27 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

**வாதி தரப்பு சாட்சிகள் –**

வா.சா.1 – தேவி (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் –**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.04.2020 | வாதி பெயருக்கு பிரதிவாதிகள் ரூ.1,00,000/–த்திற்கு எழுதிக் கொடுத்த புரோநோட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 03.12.2021 | வாதி பிரதிவாதிகளுக்கு புரோநோட் கடனை திரும்ப செலுத்தக் கோரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அதனை அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 04.12.2021 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை (எண்ணம் 2) | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.